RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 265 | செப்டம்பர்.26 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பாஜக பொறுப்பாளர்களை நியமித்தார் ஜெ.பி. நட்டா



புதுடெல்லி: செப்.26-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பொறுப்பாளர்களை பாஜக நியமித்துள்ளது. இதேபோல், பிஹார் மற்றும் மேற்குவங்க சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பொறுப்பாளர்களையும் அக்கட்சி நியமித்துள்ளது.

இது தொடர்பாக பாஜக தேசிய பொதுச் செயலாளர் அருண் சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பொறுப்பாளர் மற்றும் இணை பொறுப்பாளர்களை கட்சித் தலைவர் ஜெ.பி.நட்டா நியமித்துள்ளார். அதன்படி, பாஜக தேசிய துணைத் தலைவரும் மக்களவை உறுப்பினருமான பைஜயந்த் பாண்டா தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய கூட்டுறவுத்துறை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துறைகளின் இணை அமைச்சர் முரளிதர் மோஹோல் இணை பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் உடனடியாக அமலுக்கு வருகிறது.” என தெரிவித்துள்ளார்.

இதேபோல், வரும் நவம்பரில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள பிஹாருக்கான பாஜக தேர்தல் பொறுப்பாளராக மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் நியமிக்கப்பட்டுள்ளார். இணைப் பொறுப்பாளர்களாக, மத்திய நீர் சக்தித்துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீல், உத்தரப் பிரதேச துணை முதல்வர் கேசவ பிரசாத் மவுரியா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குவங்க பாஜக தேர்தல் பொறுப்பாளர்களாக மத்திய அமைச்சர் பூபேந்திர யாதவ், திரிபுரா முன்னாள் முதல்வர் பிப்லப் தேப் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ரயிலில் இருந்து 2000 கி.மீ தூரம் வரை தாக்கும் அக்னி ப்ரைம் ஏவுகணை சோதனை வெற்றி

### ராஜ்நாத் சிங் பெருமிதம்

புதுடெல்லி: செப்.26-

ரயிலில் இருந்து மொபைல் லாஞ்சர் மூலமாக 2,000 கி.மீ. வரையிலான இலக்கை தாக்கும் அக்னி ப்ரைம் ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியதற்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக ராஜ்நாத் சிங் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “ரயிலில் இருந்து மொபைல் லாஞ்சர் மூலமாக அக்னி ப்ரைம் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக ஏவியுள்ளது. இந்த அடுத்த தலைமுறை ஏவுகணை 2000 கி.மீ. வரையிலான இலக்கை தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இது பல்வேறு மேம்பட்ட அம்சங்களையும் கொண்டுள்ளது.

நகரும் ரயில்களின் மூலம் ஏவுகணைகளை ஏவும் அமைப்பை உருவாக்கிய நாடுகளின் வரிசையில் இந்தியாவும் சேர்ந்துள்ளது. இந்த அக்னி ப்ரைம் ஏவுகணையை வெற்றிகரமாக சோதித்ததற்காக டிஆர்டிஓ, எஸ்எஃப்சி மற்றும் ஆயுதப்படைகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வகை ஏவுகணை ரயில் நெட்வொர்க் மூலம் நகரும் திறனைக் கொண்டுள்ளது. இதன் மூலமாக நாடு முழுவதிலும் இருந்து, குறுகிய நேரத்தில் நமது எதிர்வினையை தொடங்க முடியும்” என்றார்.



## விஜய் பிரச்சாரத்துக்கு கட்டுப்பாடு விதிக்க கூடாது: ஓபிஎஸ் கருத்து



மதுரை: செப்.26-

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மதுரை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை என்டிஏ கூட்டணிக்கு அழைப்பு விடுப்பது குறித்து பதில் சொல்ல விரும்பவில்லை. அதிமுகவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கட்சிக்குள் வருவதை வரவேற்கிறோம் என்று வைகை செல்வன் எந்த அடிப்படையில் கூறுகிறார் என்று தெரியவில்லை. தேர்தல் கூட்டணி குறித்து சி.வி.சண்முகம் பேசுகிறார்.

கூட்டணி சேர வேண்டும் என்று அவர் வீட்டு வாசலில் யார் நின்றார்கள்? தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்துக்கு அதிக கட்டுப்பாடுகள் விதிக்க வேண்டியதில்லை. திமுகதான் எதிரி என்று விஜய் கூறுவதற்கு திமுகதான் பதில் சொல்ல வேண்டும். நாங்கள் அவருடன் சேருவது பற்றிய தகவல்கள் வதந்தியாகும். விஜய்க்கு கூட்டம் கூடுகிறது. இதை மறுக்க முடியாது. ஆனால், அது வாக்காக மாறுமா? என்பதை தேர்தல் முடிவு வெளியான பிறகே கூற முடியும். இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

## மகளிர் முன்னேற்றம் அதுவே மாநிலத்தின் முன்னேற்றம்..... மக்களின் முதல்வர்” முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.” ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன் சிறப்பு பேட்டி

தென்காசி, செப்.26

தென்காசி மாவட்டத்தின் முக்கியமான ஊராட்சி ஒன்றியங்களில் ஒன்று ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் ஆகும் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவராக இருப்பவர் திவ்யா மணிகண்டன் ஆணுக்குப் பெண் சமம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஒன்றிய குழு தலைவர் அவர்கள் 2026 இல் மீண்டும் தமிழக முதல்வராக மாண்பு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே தொடர்வார் அதற்கு காரணம் மகளிர் நலன் காக்கும் திட்டங்களை மையப்படுத்தி மகளிர் முன்னேற்றத்திற்காக பாடுபடுவதே ஆகும் எதிர்வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் பழைய புதிய எதிரிகள் யார் வந்தாலும் 234 இலட்சியம் 200 நிச்சயம் என தெரிவித்துள்ளார் இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவதுதமிழ்நாட்டின் மகளிர் மைய நலத்திட்டங்கள் அடிப்படையிலிருந்து மாற்றத்தை மேம்படுத்துதல் தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024 கலைஞர் மகளிர் உரிமை திட்டம் புதுமைப்பெண் திட்டம் தோழி விடுதிகள் தமிழ்நாடு மகளிர் நலத் திட்டங்கள் இந்திய மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெண்களுக்கு 40 சதவீத இட ஒதுக்கீடு தமிழ்நாடு மகப்பேறு விடுப்பு கொள்கை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு இட ஒதுக்கீடு என பல்வேறு நிலைகளில் பெண்களின் முன்னேற்றத்திற்காக தமிழகத்தின் முதல்வர் முத்தமிழ் அறிஞர் அவர்களின் வழியில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திறம்பட செயல் பட்டு வருகிறார் அவரது





கரத்தை நாம் வலுப்படுத்த வேண்டும் 2026லிருந்து தளபதி தான் தமிழகத்தின் முதல்வர் அதற்கு மகளிரின் பங்கு இன்றியமையாதது நமக்காக பாடுபடும் நம் முதல்வரை நாமே கொண்டாடுவோம் பெண்கள் உரிமையை மையமாகக் கொண்ட கொள்கை

2024ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு வெளியிட்ட மாநில பெண்கள் கொள்கை நாட்டில் கவனத்தை ஈர்த்தது. இந்த கொள்கையின் கீழ் உடனடி செயலாக்கமாக ‘மகளிர் விடியல் பயணம் திட்டம்‘ செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தின் வாயிலாக மாநில பேருந்துகளில் பெண்களுக்கு இலவச பயண வசதி அளிக்கப்பட்டது. இதன் மூலம் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள லட்சக்கணக்கான பெண்கள் மாதம் ₹888 வரை செலவு சேமிக்க முடிந்தது.

மாத வருமானத்துடன் நிதி நிலையை உயர்த்தும் திட்டங்கள்

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ், 1.15 கோடி பெண்கள் மாதம் ₹1,000 நேரடி வங்கிக் கணக்கில் பெறுகின்றனர். இது பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கு நிதியியல் உறுதிமிக்க ஆதரவாக உள்ளது. அதனுடன் சேர்ந்து, ‘புதுமை பெண் திட்டம்‘ அரசு மற்றும் அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ₹1,000 வழங்குகிறது. இதன் விளைவாக பள்ளியிலிருந்து கல்லூரிக்கு செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை 34% அதிகரித்துள்ளது.

வேலைப்பெண்களுக்கு பாதுகாப்பான வசதிகள்

தொழில் வாய்ப்புகளுக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, ‘தோழி விடுதிகள்‘ திட்டம் உருவாக்கப்பட்டது. தற்போது மாநிலம் முழுவதும் 13 விடுதிகளில் 1,303 படுக்கைகள் செயல்படுகின்றன. இவை 24 மணி நேர காவல், மருத்துவ உதவிகள் மற்றும் இணைய வசதியுடன் உள்ளன. இவை நகரங்களில் வேலைக்கு செல்லும் பெண்களுக்கு பாதுகாப்பான, மலிவான குடியிருப்பாக செயல்படுகின்றன.

நீடித்த மாற்றத்துக்கான அமைப்பு சீர்திருத்தங்கள்

தொடர்புடைய நலத்திட்டங்களைத் தாண்டி, பெண்கள் சமத்துவம் நிலைபெறும் வகையில் அரசாங்கம் பல்வேறு நீடித்த கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொண்டுள்ளது. அரசு வேலைகளில் 40% ஒதுக்கீடு, நீட்டிக்கப்பட்ட மகப்பேறு விடுப்பு, மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வரம்பு உயர்த்தல் ஆகியவை இதன்கீழ் வருகின்றன. தமிழ்நாடு ஸ்டார்ட்ருஅப் விதை நிதி திட்டத்தின் கீழ், பெண் தொழில்முனைவோர்களுக்கு அரசு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும் உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு இடஒதுக்கீடு மூலம் கீழ்க் கட்டாட்சியில் அவர்களின் அரசியல் பங்கேற்பும் உறுதி செய்யப்படுகிறது.



## நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் தூய்மை இந்தியா திட்டம்

காரைக்குடி செப்.26

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நேற்று தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் காரைக்குடி மாநகராட்சி மற்றும் நாச்சியப்ப சுவாமிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் NSS, YRC மாணவர்கள் இணைந்து காலை 9.30 மணியளவில் கல்லூரி வளாகம் தூய்மை செய்யப்பட்டது. தூய்மை பணிக்கு முன்னர் காரைக்குடி மாநகராட்சி தூய்மை இந்தியா திட்ட சிறப்பு அலுவலர். சுருளிராஜன் (SO) மற்றும் மாநகர நல அலுவலர் டாக்டர். விக்னேஷ் (CHO) இணைந்து தூய்மை இந்தியா விழிப்புணர்வு பற்றியும் ஸ்வச்ஹதா (SWACHHATA) செயலியை பயன்படுத்தி மாநகராட்சி உட்பட்ட பகுதியில் உள்ள குறைதீர் கோரிக்கைகளை பதிவேற்றுவதற்கான செயல் முறைகளைப் பற்றியும் விளக்கினர். பின்னர் கல்லூரி மாணவர்கள் முன்னிலையில் தூய்மை பாரத இயக்கத்தின் தூய்மை உறுதிமொழி நிறைவேற்றப்பட்டது. நிகழ்வின் தொடக்கத்தில் கல்லூரியின் நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். பா. திருக்குமரன் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர். க. கலா அவர்கள் தலைமையுரை ஆற்றினார். நிகழ்வின் இறுதியாக நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. ஆ. நிஜந்தான் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

## ஜி.கே.மணி பதவி பறிப்பு: பாமக சட்டப்பேரவை குழு தலைவராக வெங்கடேஸ்வரன் நியமனம்!





சென்னை: செப்.26

பாமக சட்டப்பேரவை குழுத் தலைவராக செயல்பட்டு வந்த ஜி.கே.மணியை அந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, தருமபுரி எம்எல்ஏ எஸ்.பி.வெங்கடேஸ்வரன் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என பாமக வழக்கறிஞர் கே.பாலு தெரிவித்தார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்த பாமக செய்தித் தொடர்பாளர், வழக்கறிஞர் கே.பாலு, “பாமக சட்டப்பேரவை குழுத் தலைவராக செயல்பட்டு வந்த ஜி.கே. மணியை அந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, தருமபுரி எம்எல்ஏ எஸ்.பி.வெங்கடேஸ்வரன் பாமக சட்டப்பேரவை குழுத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். துணைத்தலைவராக மேட்டூர் எம்எல்ஏ சதாசிவம் தேர்வு செய்யப்பட்டார். அதேபோல, பாமக சட்டப்பேரவை குழு கொறடாவாக மயிலம் எம்எல்ஏ சிவக்குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பாமக அரசியல் தலைமைக்குழு கூட்டத்தில், பாமக சட்டப்பேரவைக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு தெரிவிக்கப்பட்டு, அதற்கு தலைமைக்குழு ஒப்புதல் வழங்கியது. அதன் கடிதத்தை இன்று சட்டப்பேரவை செயலாளரிடம் வழங்கினோம்.

மேலும், கடந்த ஜூலை 3 அன்று பாமகவின் விதிகளுக்கு புறம்பாக செயல்பட்ட சேலம் மேற்கு எம்எல்ஏ அருளை கொறடா பொறுப்பிலிருந்து நீக்கி, சிவக்குமாரை கொறடாவாக நியமிக்கும் கடித்ததை கொடுத்தோம். அதற்கு இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. இது தொடர்பாகவும் இன்று ஒரு கடிதத்தை கொடுத்துள்ளோம்.

பாமக பொதுக்குழுவில், தலைவர் அன்புமணி உள்ளிட்டோரின் பதவிக்காலத்தை ஆகஸ்ட் 2026 வரை நீட்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மான நகல் தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்பட்டது. தேர்தல் ஆணையமும் அதனை அங்கீகரித்து ஒப்புதல் அளித்துள்ளது. அதன் நகலையும் சட்டப்பேரவை செயலாளரிடம் கொடுத்துள்ளோம். மாம்பழம் சின்னமும், அதேபோல தேர்தலில் வேட்பாளருக்கு சின்னத்துக்காக கையொப்பம் இடும் அதிகாரமும் அன்புமணிக்கு தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ளது. பாமகவில் உள்ள அனைவரும் அன்புமணி தலைமையில் ஒருங்கிணைந்து செயல்படுகிறோம்.

தற்போதைய கடிதத்தின் படி, வரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில் பாமக சட்டப்பேரவை குழு தலைவர் வெங்கடேசனுக்கு இருக்கை ஒதுக்கப்பட வேண்டும். ஜி.கே. மணி பாமகவில் 25 ஆண்டுகளாக தலைவராக இருந்தவர், அனைத்து தேர்தலிலும் போட்டியிட்டவர். கட்சிக்காக நிறைய உழைத்தவர். அவர் சமீபத்தில் கட்சிக்கு எதிராக சொல்லும் கருத்துகள் வருத்தமளிக்கிறது. எனவே அவரை சட்டப்பேரவை குழு தலைவர் பொறுப்பிலிருந்து மட்டும் விடுவித்துள்ளோம், கட்சியிலிருந்து நீக்கவில்லை” என்றார்



## வேலூர், ஆட்சியரகம் எதிரில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்டம்

### மாநில அமைப்பு செயலாளர் தர்மபுரி எஸ். செல்வம் பங்கேற்று கண்டனப் பேருரை

வேலூர், செப்.26-

வேலூர் மாவட்டம், வேலூர், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி த்துறை அனைத்து பணியாளர்களின் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் பதினாறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி முதல் கட்ட மாபெரும் போராட்டம், தமிழ்நாடு ஊராட்சி செயலாளர்கள் சங்கம் மாவட்ட தலைவர் ஜி ஞானசேகரன் தலைமையிலும், மாவட்ட செயலாளர் எஸ் வினோ த்குமார் முன்னிலையிலும், மாநில பொதுக்குழு உறுப்பினர் விஸ்வநாதன் வரவேற்புரை யாற்றுகையில் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக அனைத்து அரசு பணியாளர்கள் சங்கம் மாநில அமைப்பு செயலாளர் தர்மபுரி நல்லம் பள்ளி எஸ்,செல்வம் கலந்து கொண்டு கோரிக்கை குறித்த விளக்க பேருரை யாற்றி ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்தனர்.

இந்த போராட்டத்தில் பதினாறு அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி மூன்று கட்ட போராட்ட நடவடிக்கைகளாக செப்டம்பர் 24 மாவட்ட அளவிலான கவனஈருப்பு ஆர்பாட்டமும், செப்டம்பர் 29 ஒரு நாள் தற்செயல் விடுப்பு ஆர்ப்பாட்டமும், நவம்பர் 24 காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டமும் செய்வதாக குறிப்பிட்டுள்ளனர். இந்த மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பேனர் மற்றும் பதாகைகளை கையிலேந்தி, ஊராட்சி செயலாளர்கள், தூய்மை பணியாளர்கள், பம்ப் ஆபரேட்டர்கள் உட்பட சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, தூய்மை காவலர்களின் மாதாந்திர ஊதியத்தை ரூபாய் பத்தாயிரம் ஆக உயர்த்தி ஊராட்சி மூலம் ஊதியத்தை வழங்கிட வேண்டியம், 01.06.2009 முதல் அரசாணை எண் 234ன்படி மக்கள் நலப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு காலம்முறை ஊதியத்தை தற்போது காலமறை ஊதியமாக நிர்ணயித்து பணி நிரந்தரம் செய்ய வேண்டி உள்ளிட்ட 16 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் மாநில தலைமை ஒருங்கிணை ப்பாளர் அ.ஜான்போஸ்கோ பிரகாஷ், மாநில ஒருங் கிணை ப்பாளர்கள் சுப்பிரமணி, நல்.செல்ல பாண்டியன், ம.ரவி, கே. பழனிசாமி, ஜி, ராதா, மாநில பொதுச் செயலாளர்கள் வேல்முருகன், முத்துமாரி, புதியவன், கார்த்திகேயன், செல்வராணி, சிவகாமி, மாநிலத் துணை ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாநில பொருளாளர்களுமான மகேஸ்வரன், இராமலிங்கம், இரங்கராஜ், மாரியப்பன், ஆத்மநாதன், முத்துமாரி மற்றும் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள், வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த ஊராட்சி செயலாளர்கள், வேலூர் மாவட்ட பொருளாளரும், இறைவன்காடு ஊராட்சி செயலாளருமான அம்ஜத்குமார், சத்தியமங்கலம் (பொ) இலவம்பாடி ஊராட்சி செயலாளர் ஹரி கிருஷ்ணன் (பேர்ணம்பட்டு), பெருமாள், பாஸ்கரன், பாலமுருகன், யுவராஜ், அருள், தசரதன், நந்தகுமார், நீலமேகன் மற்றும் பலர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்ட உரையாற்றினர். இறுதியில் வேலூர் மாவட்ட பொருளாளரும், இறைவன்காடு ஊராட்சி செயலாளருமான எஸ்.அம்ஜத்குமார் நன்றியுரையாற்றி இந்த மாபெரும் ஆர்பாட்டம் நிறைவுபெற்றது.





## காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் மூன்று நாட்கள் நடைபெறும் கலைத் திருவிழாவின் தொடக்க விழா

காரைக்குடி, செப்.26-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் தமிழ்நாடு அரசு உயர் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க மூன்று நாட்கள் நடைபெறும் கல்லூரி கலைத் திருவிழாவின் தொடக்க விழா நேற்று (செப்25) கல்லூரியின் உமையாள் கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை வகித்து கலைத் திருவிழாவின் நோக்கம் குறித்தும், இதனால் மாணவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கிக் கூறினார். கல்லூரியின் வரலாற்றுத் துறை தலைவர் முனைவர் நிலோபர் பேகம் வரவேற்புரை ஆற்றினார். கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் சந்திரசேகரன், தமிழ் துறைத் தலைவர் முனைவர் சிதம்பரம், தமிழ் துறை இணைப் பேராசிரியர் முனைவர் குமார், விலங்கியல் துறைத் தலைவர் முனைவர் போதகுரு ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ் துறை இணைப் பேராசிரியர் முனைவர் செல்வமீனா நன்றி கூறினார். தமிழ் துறை கௌரவ விரிவுரையாளர் முனைவர் அனிதா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஏராளமான பேராசிரியர்களும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர். அதன் பின் தமிழ்நாடு அரசின் உயர் கல்வித் துறையின் ஆணைக்கிணங்க மாணவ மாணவிகளுக்கு பல்வேறு கலைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

## உலக அளவில் புகழ் பெற்ற வேலூர் வி.ஐ.டி.யில் செப்டம்பர் 26, 27, 28 தேதிகளில் கிராவிடாஸ் அறிவுசார் விழா வேந்தர் கோ.விசுவநாதன் அறிவிப்பு

### 40,000 மாணவர்கள் பங்கேற்பு; 200க்கும் மேற்பட்ட ட்ரோன் ஷோ, ரோபோ வார், ஸ்டார்ட் அப் நிகழ்வுகள்

வேலூர், செப்.26-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 26ம் தேதி தொடங்கும் கிராவிடாஸ் அறிவுசார் நிகழ்வில் 207 நிகழ்வுகளும், 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்கின்றனர் என வி.ஐ.டி. வேந்தர் கோ. விசுவநாதன் தெரிவித்தார்.

வேலூர் விஐடி பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் வேந்தர் கோ.விசுவநாதன் கூறியதாவது:

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் 16வது ஆண்டாக கிராவிடாஸ் 2025 அறிவுசார் விழா செப்டம்பர் 26ம் தேதி தொடங்கி செப்டம்பர் 28ம் தேதி வரை மூன்று நாள்கள் நடைபெறுகிறது.

இந்த நிகழ்வு மாணவர்களின் புதுமை மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் தளமாக இருந்து வருகிறது. நிகழாண்டில் கிராவிடாஸ் அறிவுசார்



விழாவில் 207 நிகழ்வுகள் நடைபெறுகின்றன. 60 க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் முன்கூட்டியே நடந்துள்ளன. மீதமுள்ள 147 நிகழ்வுகள் கிராவிடாஸ் விழாவில் நடைபெறும். நிகழாண்டில் 84 புதிய நிகழ்வுகள் இணைக்கப்பட்டுள்ளன.

இதில் 51 ஹேக்கதான், 57 பயிற்சி பட்டறைகள், 24 தொழில்நுட்ப போட்டிகள், 75 புதுமையான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அடங்கும்.

நிகழாண்டில் ரோபோ வார், ட்ரோன் ஷோ, கோ கார்ட்டிங் மற்றும் ஏரோகிராப்டர்ஸ், குவாட்காப்டர், கோட்2 கிரியேட் ஆகிய சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கிராவிடாஸ் நிகழ்வில் சுமார் 40 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவ, மாணவிகள் பங்கேற்க உள்ளனர். மகாராஷ்டிரம், கர்நாடகம், மேற்குவங்கம், டெல்லி, தெலங்கானா மற்றும் ஆந்திரபிரேதசம் ஆகிய மாநிலங்களில் இருந்து 450க்கும் மேற்பட்டோர் பங்கேற்க உள்ளனர்.

சுமார் 3000க்கும் மேற்பட்ட கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் இருந்தும், 300க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இருந்தும் கிராவிடாஸ் நிகழ்வில் மாணவ, மாணவிகள் பங்கேற்க உள்ளனர். வெளிநாடுகளை சேர்ந்த 50க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்க உள்ளனர். கிராவிடாஸ் விழாவில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகள், ஹேக்கதானில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சுமார் ரூ.30 லட்சம் அளவுக்கு ரொக்கப் பரிசு, கல்வி பயிற்சிக்கான பரிசு கூப்பன்கள் வழங்கப்பட உள்ளன.

மேலும் ஹேக்கதான் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு நேர்முகத்தேர்வு மற்றும் இன்டர்ன்ஷிப் பயிற்சி ஆகியவை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஸ்டார்ட் அப் தொழில் முனைவோர்களுக்கு தனியாக “கேப்பிடல் ஹன்ட்” என்ற நிகழ்வு நடைபெறுகிறது. கிராவிடாஸ் தொடக்க நிகழ்வில் அபுதாபி நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மஜித் அலி அல் மன்சூரி சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். கவுரவ விருந்தினர்களாக நியூஸ் 18 நிர்வாக ஆசிரியர் ஆனந்த் நரசிம்மன், மேக்ஸிமஸ் இந்தியா நிறுவனத்தின் பிரவீனா பீமவாரப்பு ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

செப்டம்பர் 28ம் தேதி நடைபெறும் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக கர்நாடக மாநில எலக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் தலைவர் சரத்குமார் பச்சேகவுடா, கவுரவ விருந்தினராக நிதி ஆயோக் இயக்குநர் சாஷங் ஷா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து கிராவிடாஸ் நிகழ்வையொட்டி ஜெர்சியை வேந்தர் கோ. விசுவநாதன் அறிமுகம் செய்து வைத்தார். பேட்டியின்போது விஜடி செயல் இயக்குநர் சந்தியா பென்டரெட்டி, ரமணி பாலசுந்தரம், துணைவேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் பார்த்தசாரதி மல்லிக், கிராவிடாஸ் ஒருங்கிணைப்பாளர் ஷர்மிளா ஆகியோர் உடனிருந்தனர்.

## மதுரை சிட்டம்ப்பட்டி டோல்கேட்டில் வாகன சோதனை 176 கிலோ கஞ்சா பறிமுதல் : கடத்திய நபர் கைது

மதுரை, செப் 26-

மதுரை போதை பொருள் நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர். ரா. ராஜாங்கம் தலைமையில் கடந்த 22.09.2025, மாலை இரகசியத் தகவலின் அடிப்படையில், மதுரை மாவட்டம். ஒத்தக்கடை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, சிட்டம்பட்டி டோல்கேட் அருகே வாகன சோதனை மேற்கொண்டதில், வாகன எண் KA 01 AJ 1913 டாரஸ் கண்டெய்னர் லாரியில், ஆந்திராவில் இருந்து கடத்திவரப்பட்ட 176 கிலோ எடையுடைய கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், லாரி ஒட்டி வந்த மருதுபாண்டி (வ 39), த/பெ.சேகர், ஆதிப்பட்டி கிராமம், அருப்புக்கோட்டை தாலுக்கா, விருதுநகர் மாவட்டம், என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டதில், முதற்கட்ட விசாரணையில், மேற்படி கஞ்சாவை ஆந்திராவில் இருந்து கொண்டு வந்ததாக தெரிய வருகிறது.இது தொடர்பாக மதுரை போதை பொருள் நுண்ணறிவு பிரிவு குற்ற எண். 9/2025-6, NDPS 8(c) 20(b)(ii) (C), 25, 5 29 (1) சட்டப்பிரிவு கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டு, இவ்வழக்கில் தொடர்புடைய பிற குற்றவாளிகளை பிடிக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும், பொதுமக்கள், போதைப்பொருள் மற்றும் மனமயக்க பொருட்களின் சட்டவிரோத விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பான எந்தவொரு தகவலையும் 10581 என்ற கட்டணமில்லா உதவி எண்ணிலும், 9498410581 என்ற வாட்ஸ்அப் எண் மூலமாகவும் அல்லது spnibcid@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

## இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை, தமிழ்நாடு, இந்திய அமைப்பின் சார்பாக சபரிமலை பம்பாவில் அகோல ஐயப்ப சங்கமம் நிகழ்ச்சி

கேரளா, செப்.26-

இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை, தமிழ்நாடு, இந்திய அமைப்பின் சார்பாக (செப் : 20 )காலை சென்னை.,வே.குமார் குருசாமி நிறுவனர் மற்றும் தேசிய தலைவர்.,தென்காசி லட்சுமணன் முதலியார் குருசாமி.,தேசியத் துணைத் தலைவர்., டி .கணேசன் ., தேசிய செயலாளர்., ஜே.அருண்குமார் தேசிய பொருளாளர்., வி. கே. குமார் தமிழ்நாடு மாநிலத் துணைத் தலைவர்., கே. தனசேகரன் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் தேசிய மாநில மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் சபரிமலை பம்பாவில் நடைபெற்ற அகோல ஐயப்ப சங்கமம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உழவாரப் பணிக்கான கடிதத்தை



இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்., பி. கே. சேகர்பாபு மற்றும் திருவாங்கூர் தேவசம்போர்டு தலைவர் . ,பிரசாந்த், செயல் அலுவலர்.,பிஜு மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கு வேண்டுகோளை கடிதத்தின் வழியாக சமர்ப்பித்தனர். மேலும் இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை அமைப்பின் இலங்கை தேசிய தலைவர்.,சிவம்பரமேஸ் மற்றும் ஐயப்ப பக்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பசுமை இயக்க தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா

திருப்பூர், செப்.26-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (24.09.2025) திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி பேரூராட்சி, கைத்தமலை ஸ்ரீ வெற்றி வேலாயுதசுவாமி திருக்கோவில் வளாகத்தில் தமிழ்நாடு பசுமை இயக்க தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் பணியினை துவக்கி வைத்தார்கள்.



தமிழ்நாடு அரசு மாநிலத்தின் காடுகள் மற்றும் மரங்களின் பரப்பளவை புவியியல் பரப்பளவில் தற்போதைய 23.8 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக ஆக 2030ஶ-31 க்குள் உயர்த்தும் நோக்க த்துடன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை மூலமாக தமிழ்நாடு பசுமை இயக்கத்தை தொடங்கியது.

இந்த இயக்கத்தின் நோக்கம், பத்து ஆண்டுகளில் சுமார் 13,500 சதுர கி.மீ பரப்பளவில் 265 கோடி உள்ளூர் மரச்செடி நாற்றுகளை நடவு செய்வதாகும். உயிரினப் பல்வகைமையை மேம்படுத்துதல், காடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல், சதுப்பு நிலக்காடுகளை விரிவுபடுத்துதல் மற்றும் சேதமடைந்த சதுப்பு நிலக்காடுகளை புதுப்பித்தல், மாநில நெடுஞ் சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் மரங்களை நடவு செய்தல். விவசாய நிலங்களில் மரங்களை வளர்த்தல், நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளைப் பசுமைப்படுத்துதல், கல்வி நிறுவனங்கள், கோவில் வளாகங்கள், புனித காடுகள், தொழிற்சாலை பகுதிகள், குளக்கரைகள், படுகை பகுதிகள் போன்ற இடங்களில் மரம் நடவு செய்தல், பசுமை வேலைவாய்ப்புகள் மூலம் உள்ளூர் மக்களை வலுப்படுத்துதல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல் ஆகும். இதுவரை மாநிலம் முழுவதும் 10.86 கோடி நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. வனத்துறையின் கீழ் 313 நாற்றங்கால்கள் மற்றும் 5 உயர் தொழில்நுட்ப நாற்றங்கால்கள் நிறுவப்பட்டுள்ளன.மாவட்ட ஊரக வளர்ச்சி துறையின் கீழ், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பின் மூலம் 1,045 நாற்றங்கால்கள் நிறுவப்பட்டுள்ளன. கிராமப்புற உயிரினப் பல்வகைமையை ஊக்குவிக்கும் வகையில் பசுமையான விளையாட்டு/ ஓய்வு பகுதிகளாக பயன்படும் 88 “மரகதப் பூஞ்சோலைகள்” உருவாக்கப்பட்டுள்ளன. 24 சதுர கி.மீ புதிய சதுப்பு நிலக்காடுகள் உருவாக்கப்பட்டுள்ளன; மேலும் 12 சதுர கி.மீ சேத மடைந்த சதுப்பு நிலக்காடுகள் புதுப்பிக் கப்பட்டுள்ளன. பசுமைத் தமிழ்நாடு இயக்கம் என்பது தமிழ்நாட்டின் வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களால் 24.09.2024 அன்று தொடங்கப்பட்ட முன்னோடி திட்டமாகும். இத்திட்டம் தொடங்கப்பட்ட தினத்தையே ஒவ்வொரு வருடமும். செப்டம்பர் 24ம் தேதியை பசுமை தமிழ்நாடு இயக்க தினமாக கொண்டாடி வருகிறோம். இந்த நாள், மாநிலம் முழுவதும் மரங்களின் பரப்பளவை புவியியல் பரப்பளவில் உயர்த்தவும், உயிரினப் பல்வகைமையை வலுப்படு த்தவும், மக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதையும் நோக்கமாக கொண்டது.

2025-26 ஆண்டு மாநிலம் முழுவதும் 12.65 கோடி நாற்றுகளை நடவு செய்யும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாவல் மரம் 2025 ஆம் ஆண்டிற்கான முக்கிய சூழியல் மரமாக அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து வனத்துறையின் சார்பில் 2025-26 ஆண்டில் 1.5 லட்சம் நாவல் நாற்றுகளை நடவு செய்ய திட்டமிட்டுள்ளது

அந்த வகையில் இன்றைய தினம், திருப்பூர் மாவட்டத்தில் கைத்தமலை ஸ்ரீ வெற்றி வேலாயுதசுவாமி திருக்கோவில் வளாகத்தில் தமிழ்நாடு பசுமை இயக்க தினத்தை முன்னிட்டு 50 நாவல் மரக்கன்றுகள் நடும் பணி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், வேம்பு, புங்கன், மலைவேம்பு, புளியமரம், மருதம், அசோகமரம், பனை, சொர்கமரம் போன்ற உள்ளூர் மர இனங்களும் நடவு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்தார்கள். தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் பேரூராட்சி, கைத்தமலை ஸ்ரீ வெற்றி வேலாயுதசுவாமி திருக்கோவில் வளாகத்தில் தமிழ்நாடு பசுமை இயக்க தினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் பணியினை துவக்கி வைத்தும், மீண்டும் மஞ்சப்பை திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள்.





## சோழிங்கநல்லூர் 198 வது வட்டம் காரப்பாக்கத்தில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

சோழிங்கநல்லூர், செப்.26-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி : கிராம நெடுஞ் சாலை, அருள்மிகு ஸ்ரீ செல்லியம்மன் ஆலயத்தில், செப் (24) “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“ மாண்புமிகு தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், மாண்புமிகு துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். 198 வது வட்டக் கழகச் செயலாளர், பா.தேவகுமார் வரவேற்றார். தொடர்ந்து

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் 15வது மண்டல குழு தலைவர்.,வி.இ.மதியழகன் எடுத்துரைத்தார் . முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள், நகர்ப்புற பகுதிகள் 13 துறைகள், 43 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள், எம். எல். ஏ. எஸ் .அரவிந்த் ரமேஷ்

பொதுமக்களின் குறைகளை பொறுமையாக கேட்டு அறிந்து மனுக்களாக பெற்று விரைவில் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்ட சான்றிதழை பொது மக்களுக்கு எம்.எல்.ஏ வழங்கினார். விரைவில் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் குறிப்பிடத்தக்கது.



## தங்கப்பதக்கம் வென்ற 17 வயது சிவகங்கை மாணவி அந்த்ரா பாராட்டுவிழா

சிவகங்கை, செப்.26-

சிவகங்கை மாணவி ஆசிய அளவில் கஜகஸ்தான் நாட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சுடும் போட்டியில் சென்னை ரைஃபிள் கிளப் உறுப்பினர் 17 வயது மாணவி அந்த்ரா இராஜசேகர் கலந்து கொண்டு தங்கப்பதக்கத்தையும் தனிப்பிரிவில் வென்கலப் பதக்கத்தையும் வென்று சாதனை புரிந்துள்ளார்...

கடந்த 72 ஆண்டுகளில் ஆசிய அளவிலான துப்பாக்கி சுடும் போட்டியில் சென்னை ரைஃபிள் கிளப்பின் முதல் மாணவி என்ற பெருமையையும் பெற்றுள்ளார்...

இவர் ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி கற்பூரசுந்தரபாண்டியனின் பெயர்த்தியும், சென்னை ரைஃபிள் கிளப் செயலாளர், சிவகங்கை கே.ஆர். மேல்நிலைப் பள்ளியின் செயலாளருமான இர்ஜசேகரின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது...

மாணவி அந்த்ராவிற்கு நேற்று முன்தினம் மாலை பாராட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது...

இதில் நகரின் பல்வேறு முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்...

ஆசிரியர் முத்துப்பாண்டி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிட

சிவகங்கை இளைய மன்னர் மகேஷ்துரை , சிவகங்கை எம்எல்ஏ செந்தில்நாதன் , சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சு. குணசேகரன் , திராவிடர் கழக மாவட்டக் காப்பாளர் மூத்த வழக்கறிஞர் இன்பலாதன் , மகிளா காங்கிரஸ் மாநில துணைத்தலைவர், வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்க பட்டையத்தலைவர் அரிமா ஸ்ரீ வித்யா கணபதி, தொழிலதிபர் பாண்டிவேல் , அதிமுக ஒன்றிய செயலாளர் செல்வமணி , ஊராட்சி மன்ற மேனாள் தலைவர் கீழக்குளம் செ. கார்த்திச்சாமி , அதிமுக பிரமுகர் இராமு. இளங்கோவன் , நல்லாசிரியர் கண்ணப்பன், ஆசிரியர் முத்துக்கண்ணன், வழக்கறிஞர் ராம்பிரபாகர் , தலைமை ஆசிரியர் சரவணன், தமிழாசிரியர் நீ. இளங்கோ, ஏபிசி. இராதாக்கிருஷ்ணன் , திமுக மாவட்டப்பிரதிநிதி வீரகாளை , நகர் திமுக சுற்றுசூழல் அணி அமைப்பாளர் சுப. ஜெயக்குமார், உள்ளிட்ட என்எஸ்எஸ் மாணவர்கள் என பல முக்கியப் பிரபலங்கள் கலந்து கொண்டு வீராங்கனை அந்த்ராவிற்கு தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்தனர்...

நிகழ்ச்சியின் இறுதியில் தமிழாசிரியர் நீ. இளங்கோ அவர்கள் நன்றி கூறினார்... நிகழ்ச்சி ஏற்பாடுகளை அந்த்ரா இராஜசேகர் குடுமபத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்...

இதனிடையே பேசிய மாணவி அந்த்ரா இத்தகைய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியருக்கு தனது நெஞ் சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்...




## வேலூர் அடுத்த சத்துவாச்சாரியில் சித்த வைத்தியர் அர்ஜுனன் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினம் முன்னிட்டு சித்த மருத்துவ விழிப்புணர்வு மற்றும் விருதுகள் வழங்கும் விழா

வேலூர், செப்.26-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த சத்துவாச்சாரி, சோலை கூட்ட அரங்கில், சித்தாவரம் கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை சார்பாக மறைந்த புகழ்பெற்ற சித்த வைத்தியர் அருச்சுனன் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சித்த மருத்துவ விழிப்புணர்வு மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி சித்த மருத்துவர் மரு. பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மூத்த ஐ.நா. சபை அலுவலர் கண்ணன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி விருதுகளை வழங்கினார். இநிகழ்ச்சியில் சித்த மருத்துவர்கள் டம்பாச்சாரி செல்வம், சிவராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நிறைந்தது மனம் ஊட் டச்சத்து பெட்டகம்,

நிறைந்தது மனம் ஊட்டச்சத்து பெட்டகம், தமிழ் நாடு அரசு, கர்ப்பிணிப் பெண்களுக்கு பொது சுகாதாரத்துறையின் மூலம் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ.4000/ மதிப்பிலான ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுகிறது. இது கர்ப்பிணி பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. இந்த ஊட்டச்சத்து பெட்டகம், கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான சத்துகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இது அவர்களின் மற்றும் அவர்களின் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது.



தமிழகத்தில் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து பெட்டகம் சத்தான உணவுகளை வழங்குவதற்கான முக்கிய திட்டமாகும். ஊட்டச்சத்து பெட்டகத்தில் 1 கிலோ ப்ரோ பிஎல் ஊட்டச்சத்து மாவு, 200 மி.லி இரும்புச் சத்து டானிக், 1 கிலோ பேரிச்சம்பழம், 1 கிலோ ஆவின் நெய், ஆல்பெண்டசோல் (Al-bendazole) குடற்புழு நீக்க மாத்திரைகள், கோப்பை மற்றும் துண்டு, பொருள் கள் வைக்கும் பை ஆகியவை வழங்கப்படுகிறது.

இதன் மூலம் மகப்பேறின்போதும் நிகழும் இறப்புகளைத் தவிர்க்க முடியும். தமிழக அரசு அளித்துள்ள இந்த ஊட்டச்சத்து மாவு மற்றும் இரும்புச் சத்து நிறைந்த டானிக்குகள் கர்ப்பிணிகளுக்கு மிகவும் பயனளிக்கும்‘’

கர்ப்பிணிகள் 12 வாரங்களுக்குள் கிராம, நகர செவிலியர்களிடம் பதிவு செய்து ஆர்.சி.எச். அடையாள எண் அல்லது பிக்மி எண் பெற்றிருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு மூன்றாம் மற்றும் நான்காம் மாதங்களில் இரண்டு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது, திருமதி. கவிதா, சாம்பவர் வடகரை, தென்காசி மாவட்டம்.

என் பெயர் கவிதா, கணவர் பெயர் கருப்பசாமி, சாம்பவர் வடகரையில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் கருப்பசாமி. எங்களது குடும்பம் மிகவும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பம். நான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்துள்ளேன். இத்திட்டத்தின் மூலம் எனக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார்கள். அதில் 1 கிலோ ப்ரோ பிஎல் ஊட்டச்சத்து மாவு, 200 மி.லி இரும்புச் சத்து டானிக், 1 கிலோ பேரிச்சம்பழம், 1 கிலோ ஆவின் நெய், ஆல்பெண்டசோல் (Al-bendazole) குடற்புழு நீக்க மாத்திரைகள், கோப்பை மற்றும் துண்டு, பொருள் கள் வைக்கும் பை. இருந்தது. எனக்கு இப்போது நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் இரண்டாவது ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கியுள்ளார்கள். ஊட்டச்சத்து பெட்டகத்தினால் எனக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் கிடைத்துள்ளது. என் போன்ற ஏழைப் பெண்களுக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி.பரமேஸ்வரி, சாம்பவர் வடகரை, தென்காசி மாவட்டம்.

என் பெயர் பரமேஸ்வரி, கணவர் பெயர் ராமர், சாம்பவர் வடகரையில் வசித்து வருகிறேன். எங்களது குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பம். நான் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்துள்ளதால். ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் மூலம் எனக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார்கள். அதில் 1 கிலோ ப்ரோ பிஎல் ஊட்டச்சத்து மாவு, 200 மி.லி இரும்புச் சத்து டானிக், 1 கிலோ பேரிச்சம்பழம், 1 கிலோ ஆவின் நெய், ஆல்பெண்டசோல் (Al-bendazole) குடற்புழு நீக்க மாத்திரைகள், கோப்பை மற்றும் துண்டு, பொருள் கள் வைக்கும் பை. இருந்தது. எனக்கு இப்போது நலம் காக்கும் ஸ்டாலின் முகாமில் இரண்டாவது ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கியுள்ளார்கள். ஊட்டச்சத்து பெட்டகத்தில் இருந்த ஊட்டச்சத்து டானிக் மற்றும் சத்துமாவை தினந்தோறும் உண்டு வருவதால் எனக்கு தேவையான ஆரோக்கியம் கிடைத்துள்ளது. என் போன்ற ஏழைப் பெண்களுக்கு இத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இந்த ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மனதார தெரிவித்துக்கொள்கிறேன்.

## மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்கள்

மதுரை, செப்.26-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் பனையூர் விராதனூர் ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் மணி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நீலாவதி, செயலாளர்கள் ரமேஷ் பழனிச்சாமி,கிராம நிர்வாக அலுவலர் வெங்கடகணேஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.தொடர்ந்து மேலூர் ஊராட்சி ஒன்றிய கொட்டக்குடி ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் சரஸ்வதி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் முத்து குமார், ஊராட்சி செயலாளர் கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.தொடர்ந்து செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் வாலந்தூர் ஊராட்சிக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கப் பாண்டியன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அன்பழகன், ஊராட்சி செயலாளர் பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.மேலும் தே.கல்லுபட்டி ஊராட்சி ஒன்றியம் கூவலபுரம்,அரசபட்டி,சின்னையா புரம், கிருஷ்ணாபுரம்,பாப்பையா புரம் ஆகிய , ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜ மார்த்தாண்டன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சோலையப்பன்,ஊராட்சி செயலாளர்கள் ராஜாகனி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு பொது மக்களிடம் மனுக்களை பெற்றனர்.





## மேடவாக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம் வளாகத்தில் “உங்களுடன் ஸ்டாலின் முகாம்“

மேடவாக்கம், செப்.26-

சென்னை தெற்கு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளருமான., உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலோடு

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.,மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி , சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் (செப்டம்பர் : 23) நடைபெற்றது. முகாமை சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர், எஸ். அரவிந்த் ரமேஷ் ஆய்வு மேற்கொண்டார். ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்.,ஆர்.எஸ். லோகேஸ்வரா அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து ஊராட்சி மன்ற தலைவர், சிவபூஷணம் ரவி தலைமையில் நடைபெற்ற முகாமில் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளையும், உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். முகாமில்15 துறைகளை சேர்ந்த அரசு அதிகாரிகள் மனுக்களை பெற்று சில துறைகளில் மூலம் உடனக்குடன் தீர்வு காணப்பட்ட சான்றிதழ் மற்றும் நலத்திட்ட உதவி கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டிகள் ஊராட்சி மன்ற தலைவர், சிவ பூசணம் ரவி வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர். கோவிலம்பாக்கம், ஜி. வெங்கடேசன், சித்தாலப்பாக்கம் ஒன்றிய கவுன்சிலர்.,தலைமை பொதுக்குழு உறுப்பினருமான. ,மேடவாக்கம, ப.ரவி, மற்றும் வார்டு உறுப்பினர்கள்: ஒன்றிய கவுன்சிலர், கல்பனா சுரேஷ், மற்றும் கழக நிர்வாகிகள் நிகழ்வில் கலந்து கொண்டு பொதுமக்கள் குறைகளை தீர்த்து வைத்தனர்.





## வேலூர் சாரதி மாளிகை கோ ஆப் டெக்ஸில் எதிர்வரும் தீபாவளி பண்டிகை முன்னிட்டு பட்டு மற்றும் பருத்தி போன்ற கைத்தறி துணி ரகங்கள் விற்பனை துவக்க விழா

வேலூர், செப்.26-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அண்ணா சாலை, சாரதி மாளிகை வளாக வேலூர் கோ ஆப் டெக்ஸில் எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, பட்டு மற்றும் பருத்தி போன்ற கைத்தறி ரக பொருட்களின் விற்பனையை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி ஆடை ரகங்களை பார்வையிட்டு தீபாவளி விற்பனையை துவக்கி வைத்தனர். இந்நிகழ்வில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில், 2 மண்டல குழு தலைவர் வீனஸ் ஆர்.நரேந்திரன், கைத்தறி உதவி இயக்குநர் அன்பரசு, மாமன்ற உறுப்பினர் முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தயாளன், கோ ஆப் டெக்ஸ் மண்டல மேலாளர் ரத்னா, மேலாளர் சந்துரு, தீபம் கோ ஆப் டெக்ஸ் அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளராக 25 ஆண்டுகால வாடிக்கையாளர் (இராமநா யக்கன் பாளையம்) ஆர்.என் பாளையம், அரசு மாநகராட்சி முஸ்லிம் உயர் நிலைப் பள்ளி, தலைமை ஆசிரியர் மா. சிநேகலதா, கலந்து கொண்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுடன் குத்துவிளக்கேற்றி சிறப்பித்து ரூபாய் 35 ஆயிரத்திற்கு ஆடைகளை வாங்கி முதல் விற்பனையை தொடங்கி வைத்தனர். இதனை ஆட்சியர் ஆடைகளை வழங்க இவர் பெற்றுக் கொண்டார்.



## 72 ஆண்டுகளில் முதல் முறையாக ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற17 வயது வீராங்கனை

சிவகங்கை, செப்.26-

சென்னை ரைபிள் கிளப் உறுப்பினர் ஆந்திரா என்ற வீராங்கனை இந்திய அணியில் உறுப்பினராக கலந்து கொண்டு குழு பிரிவில் தங்கப் பதக்கத்தை தனி பிரிவில் வெண்கல பதக்கத்தையும் வென்று சாதனை படைத்துள்ளார். ஆந்திரா இராஜ் சேகர் சமீபத்தில் கஜகஸ்தானில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் கடந்த 72 ஆண்டுகளில் முதல்முறையாக ஆசிய அளவில் துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் பெற்ற முதல் சென்னை ரைபிள் கிளப் உறுப்பினர் என்ற பெருமையும் பெற்றுள்ளார் இவர் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி இரா கற்பூரசுந்தர பாண்டியன் பேத்தியும் ஆவார் சிவகங்கை கே ஆர் மேல்நிலைப்பள்ளி செயலாளர் மற்றும் சென்னை ரைபிள் கிளப் செயலாளர் இ ராஜ் சேகர் மகளும் ஆவார் இவர் இணை இன்று அமைச்சர் பெரிய கருப்பன் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் மகேஷ் துறை மற்றும் சிவகங்கை பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் சமூக ஆர்வலர்கள் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டு வீராங்கனை ஆந்திராவை பாராட்டியும் பரிசளித்து சென்றார்கள்..

## திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் சிவப்பிரகா குறைதீர்க்கும் நாள் கூட்டம் 30.09.2025 அன்று நடைபெறவுள்ளது

திருப்பூர், செப்.26-

திருப்பூர் மாவட்டம் திருப்பூர் வருவாய் கோட்டத்தில் கோட்டளவில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 30.09.2025 அன்று முற்பகல் 11.00 மணியளவில் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே 30.09.20225 அன்று முற்பகல் 11.00 மணிக்கு மேற்கண்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவிக்குமாறு திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு சிவப்பிரகாஷ் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.





# செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரம் மாநகர சேலையூர் பகுதி அதிமுக சார்பில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம்

சேலையூர், செப்.26-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், தாம்பரம் மாநகர சேலையூர் பகுதி அதிமுக சார்பில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் (செப்: 22) மாலை 5 மணிக்கு வேளச்சேரி மெயின் ரோடு , மகாலட்சுமி நகர், சாமியார் மடம், வாணி மருத்துவமனை பில்டிங் அருகில் தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர்.,சேலையூர், ஜி சங்கர் தலைமையில் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர். எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்க. ,திமுக அரசை கண்டித்து சட்டம் ஒழுங்கு சீர்கேடுகள், விலைவாசி உயர்வுகள், பெண்களுக்கு பாதுகாப் பின்மை, இளைஞர்களை சீரழிக்கும் போதைப்பொருள் கலாச்சாரம் என பல வகைகளில் சீர்கேடு அடைந்துள்ளதை விளக்கி மாபெரும் கண்டன பொதுக் கூட்டத்தில் பகுதி கழகச் செயலாளர்கள் : எம். கூத்தன், எல்லார் செழியன், ஏ. கோபிநாதன், இரா. மோகன், எம். தேவேந்திரன், ஜெ.சீனு பாபு,மதுரைப்பாக்கம்., எம்.பி.மனோகரன், எஸ். வளையாபதி, டி. அய்யனார், எம். சுதா சாந்தகுமார், டி .எஸ்.வேலு, எஸ். மகாலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வரவேற்புரையாக : எம். ஜே. எல்.சுரேஷ்பாபு, டி. ஏ. பலராமன், டி .ஆன்ரூஸ் பாபு, கே .எல்.மனிதநேய மூர்த்தி, என். ரவிக்குமார், ஜி. திவாகர், வி. இராம மூர்த்தி, ஏ. அப்துல் மஜீத், ச. கோட்டைசாமி, ஏ. கே. ஜீவன் ஜீவா, எஸ். பொன்னுசாமி, எம். வசந்த், சி. கந்தன், கே. கிருஷ்ணமூர்த்தி, வி. கோபால், டி. பாலாஜி, கே. கே. சரவணன், கே. ராஜேஷ் ., தொடர்ந்து தலைமை கழக பேச்சாளர் : காவேரி, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், சிட்லப்பாக்கம், ச. ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர், டி. கே. எம். சின்னையா மற்றும் என். சி. கிருஷ்ணன், பி.கே.பரசுராமன், தா.மு.துரைவேல், கே .எஸ்.மலர்மன்னன், ஜி. எஸ். புருசோத்தமன், ஜி. எம் .சாந்தகுமார், கே. பி. காசி ராஜ பாண்டியன், பாலாஜிஸ்ரீகாந்த், நா. இராஜகோபால் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் 65 வது கிழக்கு வட்ட கழகச் செயலாளர், ஆதி. ஜெகதீசன் நன்றி உரையாற்றினார்.





# விளை நிலங்களை வேட்டை காடாக மாற்றும் கல் குவாரிகள்: வெகுண்டு எழுந்த மேலூர் கச்சிராயன் பொதுமக்கள்

மதுரை, செப்.26-

மதுரை மாவட்டம் மேலூர் கொட்டாம்பட்டி தாலுகா கச்சிராயன் பகுதியில் மனிதர்கள் வாழத் தகுதியற்ற நிலையை உருவாக்கும் கல்குவாரி பாறைகளை வெடிவைத்து தகர்த்து

விதிமுறைகள் மீறி குவாரிகளை இயங்கச் செய்து இரவும் பகலும் கற்களை கடத்தி வருகின்றனர். மேலும் இந்தப் பகுதியில் உள்ள நீர் வரத்து பாதைகள் அடைக்கப்பட்டு ஊரணியில் நீர் வற்றி வருவதால் விளை நிலங்கள் பாதிக்கப்படும் அவல நிலை ... அனைத்து குவாரி கழிவுகளை அனுமதியின்றி விளைநிலங்களில் கொட்டப்படுகிறது.மேலும் கனரக வாகனத்தால் அப்பகுதி மக்களின் குடிநீர் குழாய்கள் அனைத்தும் சாலையில் உடைக்கப்பட்டு இருப்பதால் அடிப்படை வசதிகளுக்கு கூட பெரும் சிரமத்தை சந்திக்க வேண்டி உள்ளது.இக்குவாரிக்கு ஆளும் கட்சியின் புகழ்பெற்ற பிரமுகரின்



ஆதரவு முழுமையாக இருப்பதால் யாரும் இதனை எதிர்த்து கேள்வி கேட்பதில்லை. தமிழ்நாட்டில் மிகப் பெரும் அவமானத்தையும் தலை குனிவையும் உருவாக்கிய கிரானைட் முறைகேடு முடிவுக்கு வந்து தற்போது அதற்கான வழக்கு இன்னும் முடிந்த பாடில்லை ஆனால் கனிமவளத்துறை அஜாக்கிரதையால் மாசுக்கட்டுப் பாட்டு வாரியமும் இணைந்து விதி மீறல்களுக்கு துணை போவதால் கல் குவாரிகள் மற்றும் கிரசர்களில் ஏகபோக விதிமீறல் அதிகரித்துள்ளது.. கனிமவளத்துறையும் கைகட்டி வேடிக்கை பார்ப்பதால் கச்சிராயன் கே புதூர் கிராம மக்கள் அதற்கு எதிராக வெகுண்டு எழுந்து குடும்பமாக சாலையில் இறங்கி இப்பகுதி கல் குவாரியை அனுமதிக்க கூடாது என போராட்டம் நடத்தினர். ஆனாலும் போராட்டத்தை மழுங்கடிக்கும் விதமாக அப்பகுதியைச் சேர்ந்த ஆண்களுக்கு வேலை கொடுப்பதாகவும் பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களை அதிகபட்ச கூலி தருவதாக ஆசை காட்டி வேலை வாங்குவதையும் இங்குள்ள கல்குவாரி உரிமையாளர்கள் செய்வதால் தங்களது வறுமையின் குழுவில் இருந்து மீள வழியில்லாத ஏழை எளிய மக்களின் பாடு சொல்லொண்ணா துயரத்திற்கு ஆளாகி யுள்ளது.

இதனை எதிர்த்து குரல் எழுப்புகின்ற சமூக ஆர்வலர்களின் குடும்பங்கள் மிரட்டப்ப டுவதோடு சம்பந்த ப்பட்ட நபர்களுக்கும் கொலை மிரட்டல் இருப்பதால் சட்டம் ஒழுங்கும் கேள்விக்குறியாகி உள்ளது.

எல்லாப் பிரச்சனைகளுக்கும் சம்பந்தப்பட்ட இடத்திற்கு முதல்வர் அமைச்சர் தான் வர வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சியர் வருவாய்த்துறை ஊரக வளர்ச்சித்துறை கனிமவளத்துறை மாசுக்கட்டுப்பாட்டு துறை ஆகிய துறைகளின் வேலை தான் என்ன பகுதி மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். இந்த நிலையில் கிரானைட் வழக்கில் அதிரடியாக செயல்பட்ட சகாயம் ஐஏஎஸ் போல் தற்போதுள்ள மதுரை மாவட்ட ஆட்சியரும் செயல்பட்டு கச்சிராயன் கே புதூர் கிராமத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனர்.மனிதர்கள் வாழ மனிதர்களே இல்லாத கிராமங்களை பார்த்து வரக்கூடிய சூழ்நிலையில் கச்சிராயன் கிராமத்திற்கும் அந்த நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என குரல் அற்றவர்களின் குரலாய் இப்பகுதி மக்கள் ஆதங்கத்துடன் தமது குறைகளை தெரிவித்து வருகின்றனர். ஆளும் வர்க்கத்தின் கேளா செவிகளுக்கு இந்த எளிய மனிதர்களின் குரல் எட்டுமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.





# வேலூர் மாநகராட்சி 54, 55 வது வார்டில் விருபாட்சிபுரம் மற்றும் பலவன்சாத்து குப்பம் பொதுமக்களுக்கு தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், செப்.26-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி, வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3, விருபாட்சிபுரம், ஜெய்கல்யாண் (தனியார்) திருமண மண்டபத்தில், 54, 55வது வார்டில் விருபாட்சிபுரம் மற்றும் பலவன்சாத்துகுப்பம் பொதுமக்களுக்கு தமிழக அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் 54 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் (திமுக) பி.சுதாகர், 55வது மாமன்ற உறுப்பினர் (அதிமுக) எஸ். சரவணன் ஆகியோர் முன்னிலையில் தொடங்கியது. இதில் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி கலந்து கொண்டு முகாமை பார்வையிட்டு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணை யினை வழங்கினார்.

இந்த முகாமில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் சுனில்குமார், ஆர்டிஓ செந்தில்குமார், வட்டாட்சியர் வடிவேல், மாநகராட்சி கமிஷனர் ஆர்.இலட்சுமணன், 3வது மண்டல குழு தலைவர் யூசப்கான், உதவி ஆணையர் முகமது சதகத் துல்லா, மாநகரப் பொறியாளர் பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை சார்பில் பொது மருத்துவர் டாக்டர் சோபியா, செவிலியர் நவீன பிரியா மற்றும் மருத்துவ குழுவினர்கள், மாநகர் வருவாய் ஆய்வாளர் குமரவேல், சுகாதார ஆய்வாளர் ஆர்.சிவகுமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை இணையத்தில் பதிவேற்றம் செய்து கொண்டனர். இந்த முகாமில்நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல வாழ்வு துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலத்துறை, மின்சாரத்துறை, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, சிறு குரு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, வேளாண்மை துறை உள்ளிட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை பதிவேற்றம் செய்து தகுதியுடைய மனுதாரர்களுக்கு ஆவண ஆணைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் விருப்பாச்சிபுரம், அல்லாபுரம் பகுதி செயலாளர் (திமுக) தங்கதுரை, 54ஆவது வட்ட செயலாளர் (திமுக) ஜி.வெங்கடேசன், பகுதி துணை அமைப்பாளர் சக்திவேல், மாநகர மாணவரணி துணை அமைப்பாளர் சுரேஷ், ஐ டிவி செந்தில்குமார், பகுதி மாணவர் அணி துணை அமைப்பாளர் வினோத்குமார், வேலன் ஆகியோர் கலந்து கொண்டு புகார் தாரர்களுக்கு தங்களின் கோரிக்கைக்கான கவுண்டர் வரை அழைத்துச் சென்று பொதுமக்களுக்கு பேராதரவாக உதவி புரிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# கடையநல்லூரில் அறிவு சார் மையம் நகர மன்ற தலைவர் அமைச்சர் இடம் கோரிக்கை

தென்காசி, செப்.26-

தென்காசி மாவட்டத்தில் உள்ள பெரிய நகராட்சி கடையநல்லூர் நகராட்சி ஆகும் இங்கே கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனியார் பாலிடெக்னிக் கல்லூரிகள் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அரசு உதவி வரும் தனியார் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் என சுமார் 20க்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளது கடையநல்லூர் நகராட்சியின் பகுதியில் அமைந்துள்ள அரசு பொது நூலகம் தனியார் வீட்டு வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது தென்காசி நகர் மன்றத்தின் சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையத்தின் ஒரு பகுதியில் அறிவுசார் மையம் ஒன்று கட்டப்பட்டு பள்ளி மாணவ மாணவிகளின் கல்விப் பசியை தீர்த்து வருகிறது மேலும் போட்டித் தேர்வுகளுக்கான பாடங்கள் மற்றும் கணினியுடன் கூடிய திரை அமைப்புகள் ஆகியவை இடம்பெற்றுள்ள அறிவு சார்ந்த இடத்தை போன்று கடையநல்லூர் நகரியிலும் ஒரு அறிவுசார் மையத்தை நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் அமைத்திட வேண்டுமென சென்னை_ஆழ்வார்பேட்டையில் அமைந்துள்ள மாண்புமிகு_நகர்புற_உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.நேரு அவர்கள் இல்லத்தில் அவர்களை நேரில் சந்தித்து கடையநல்லூர்_நகர_மன்ற_ தலைவர் மூப்பன் ஹபீபுர்ரஹ்மான் கடையநல்லூர் மக்கள் நீண்ட நாள் கோரிக்கையான மாணவச் செல்வங்கள் அறிவை வளர்க்கின்ற நவீனஇணையவசதிகளின்கூடிய அறிவுசார்மையம் ஒன்றை அமைத்து தரவேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய மனுவினை மாண்புமிகு_ அமைச்சர் அவர்களிடம் வழங்கி நிறைவேற்றி தருமாறு வலியுறுத்தினார்..



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாதாந்திர சட்டம் ஒழுங்கு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த் இ.கா.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.



# சிவகங்கை அலுவலகம் முன்பு மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்: எஸ். உமாநாத் , சுப்புராம், மோகனசுந்தரம், கருணாநிதி, ரமேஷ்பாபு பங்கேற்பு

சிவகங்கை, செப்.26-

சிவகங்கை மின்வாரிய மேற்பார்வை செயற்பொறியாளர் அலுவலகம் முன்பாக மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம், ஒப்பந்த தொழிலாளர்களுக்கான ஊதியத்தை நேரடியாகவே வழங்குதல், தொடர்ந்து பத்தாண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் தொழிலாளர்களை பணிநிர்ந்தரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்திற்கு தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு மாநில செயலாளர் எஸ்.உமாநாத் தலைமையில் சங்கத்தின் மாவட்ட செயலாளர் சுப்புராம், மாவட்ட தலைவர் மோகனசுந்தரம், மாவட்ட துணை தலைவர் கருணாநிதி, கோட்டத் தலைவர் வே. ரமேஷ் பாபு ஆகியோர் போராட்டத்தில் கலந்து கொண்டு பணிநிரந்தரம் செய்ய வேண்டி முழக்கங்களை எழுப்பினர்.

இந்த போராட்டத்தில் சங்க நிர்வாகிகள் பாண்டியன், பாலமுருகன் லாரன்ஸ் ஜெபஸ்டியான் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்...



■ தென்காசி காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் அனைத்து சமுதாய மக்களாலும் இரண்டாம் பராக்கிரம பாண்டியன் என்று முடி சூட்டப்பட்ட பத்மஸ்ரீ டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் அவர்களின் 90 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் தென்காசி அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோவிலில் சிறப்பு பூஜையும் அதனைத் தொடர்ந்து வருகை தந்த பக்தர்களுக்கு லட்டு வழங்கியும் அன்னதானம் வழங்கியும் சிறப்பு செய்தார்கள் இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடார் உறவினர்கள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் அன்னதான நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசினார் தென்காசியில் பத்மஸ்ரீ டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் அவர்களுடைய பெயரை என்னாளும் நினைவு கொள்கின்ற வகையில் தென்காசி புதிய பேருந்து நிலையத்திற்கு பத்மஸ்ரீ டாக்டர் பா சிவந்தி ஆதித்தனார் அவர்களுடைய பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பேசினார் இந்த நிகழ்ச்சியில் பொதுச் செயலாளர் கொட்டாகுளம் கணேசன், தென்காசி மாவட்ட தலைவர் ராஜ் நயினார் குருசாமி நாடார் பாலசுப்பிரமணியன் முருகன் மணிகண்டன் சுசீந்திரன் கன்னன்ராஜ் மாரிச்செல்வம் கிருஷ்ணமூர்த்தி மகாபிரபு பாலசுப்ரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161